**கண்டி மாவட்டத்தின் 45 கமநல சேவை செயற்குழுக்கள் - 2024**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** கண்டி மாவட்டத்தின் 45 கமநல சேவை செயற்குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றுகை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது மற்றும் 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2024 ஆண்டிற்குரியதாக கண்டி மாவட்டத்தின் 45 கமநல சேவை செயற்குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்ததுடன் 45 செயற்குழுக்களிற்கும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்தன. இவற்றிற்கு காரணமாகயிருந்த பொருண்மையான தவறுகள் பின்வருமாறு.

### 1.3 நிதிக் கூற்றுக்கள்

#### 1.3.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்கீட்டு கொள்கைகளுடன் இணக்கமின்மை

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 1981 ஒக்டோபர் 16 திகதிய இலக்கம் 107 கொண்ட கமநல சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 30(4) பிரிவில் குறிப்பிடப்படும் பெறுமானத் தேய்வு கொள்கையின் பிரகாரம் இயந்திர உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் கொள்வனவு விலையின் மீது பெறுமானத் தேய்வு செய்ய வேண்டிய போது 22 கமநல சேவை செயற்குழுக்கள் குறைந்து செல்லும் மீதி முறையில் பெறுமானத் தேய்வு செய்திருந்தன. | 2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள பெறுமானத் தேய்வு கொள்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 86(அ) பிரகாரம் பெறுமானத் தேய்வு கொள்கையை வெளிப்படுத்த வேண்டிய போதும் 09 செயற்குழுக்களால் பெறுமானத் தேய்வு கொள்கையை வெளிப்படுத்தி இருக்கவில்லை. | 2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | நியமம் பிரகாரம் நிலையான சொத்து பெறுமானத் தேய்வுக் கொள்கையை வெளிப்படுத்த வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 பந்தி பிரகாரம் சொத்தொன்றை பெறுமானத் | 2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது | நியமம் பிரகாரம் நிலையான சொத்து பெறுமானத் |

| | | | |
|---|---|---|---|
| | தேய்விட ஆரம்பிப்பது அதனை பயன்படுத்த தயார் நிலைக்கு கொண்டு வந்த பின்னரான போதும் 08 கமநல சேவை செயற்குழுக்களால் பயன்படுத்த ஆரம்பிக்காது ரூபா 526,240 பெறுமதியான சொத்துக்களை மீளாய்வாண்டிற்காக ரூபா 76,382 இனால் பெறுமானத் தேய்வு செய்திருந்தன. | குறித்த சீராக்கத்தை மேற்கொள்ளவதாக மற்றும் நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | தேய்விடப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 15 பந்தி பிரகாரம் கிரயம் மற்றும் தேறிய மாற்றிய பெறுமதி எனும் இரண்டில் குறைந்த பெறுமானத்திற்கு இருப்பு கணக்கிடப்பட வேண்டிய போதும், 04 செயற்குழுக்களினால் தேறிய மாற்றிய பெறுமதியை கவனத்திற் கொள்ளாது கிரயத்தின் மீது இருப்பு பெறுமானமிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நியமத்தின் வழிகாட்டல் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | கணக்கீட்டு நியமம் பிரகாரம் இருப்பு பெறுமதியிடப்பட வேண்டும். |
| (உ) | 2017 பெப்ரவரி 19 திகதிய இலக்கம் 15/2016 சுற்றறிக்கையினால் திருத்திய 107 (திருத்திய 05) சுற்றறிக்கை பிரகாரம் கமநல சேவை செயற்குழுவினால் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டிய போதும் 09 கமநல சேவை செயற்குழுக்களினால் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் கணக்குகளை தயாரித்து சமர்ப்பித்திருந்தன. | ஏதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தை பின்பற்றுவதென. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தை பின்பற்ற வேண்டும். |
| (ஊ) | பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1(48) மற்றும் (49) பிரகாரம் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள போது சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வருமானமும் செலவுகளும் பதிலீடு செய்யப்படக் கூடாதென குறிப்பிட்டுள்ள போதும் அலவத்துகொட கமநல சேவை செயற்குழுவினால் மீளாய்வாண்டினுள் கிடைத்த ஒப்பந்த வருமானத்திற்கு நிலைய பராமரிப்பு செலவை பதிலீடு செய்து ரூபா 81,071 தொகை மாத்திரம் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | சேயற்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த பதிலீடு செய்யப்பட்டுள்ளதென. | நியமத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 21 (ஊ) பந்தி பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்த வேண்டிய போதும் 36 கமநல சேவை செயற்குழுக்களின் கமநல வங்கிகள் அதன் பிரகாரம் | நிதிக்கூற்றுக்கள் கமநல சேவை திணைக்கள சுற்றறிக்கை அறிவுரை மற்றும் வழங்கியுள்ள படிவத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென. | பொதுத் துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் 04 கமநல சேவை செயற்குழுக்களில் ஒப்பந்தத்தின் மீது கிடைத்த 1 சதவீத நிறுத்தல் பணம் ரூபா 463,371 தொகையை கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஜர்னல் குறிப்பு மூலம் 2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்களிற்கு உற்படுத்த மற்றும் செயற்குழு நிதியத்திற்கான தாக்கத்தை சரி செய்வதாக மற்றும் ஆண்டிற்குறிய பெறுமதியை மாத்திரம் கணக்கீடு செய்வதாக கோரி பிரதி ஆணையாளரிற்கு அறிவித்துள்ளதென. | சரியான பெறமதியை கணக்கீடு செய்ய வேண்டியதுடன், குறித்த செம்மையாக்கலை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 06 கமநல சேவை செயற் குழுக்களினால் மீளாய்வாண்டிற்கு உரியதாக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 40,821 தொகை குறைவாகவும், 07 செயற் குழுக்களினால் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 611,830 தொகை கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரி செய்ய நமவடிக்கை எடுப்பதென. | ஆண்டிற்குரிய வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன், குறித்த செம்மையாக்கலை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | 05 கமநல சேவை செயற் குழுக்களினால் ரூபா 124,651 ஆன அறை வாடகை வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு செயற்குழுக்களினால் ரூபா 13,100 ஆன அறை வாடகை வருமானம் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | ஏதிர்காலத்தில் சரியான வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஈ) | 02 கமநல சேவை செயற்குழுக்களில் 15 நிலையான சொத்து உருப்படிகளின் பெறுமதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்காததுடன் 02 கமநல சேவை செயற்குழுக்களில் காணப்பட்ட ரூபா 379,315 பெறுமதியான கொம்போஸ்ட் துண்டாக்கும் 02 இயந்திரங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட அலுவலகங்களை வினவி பெறுமதியை பெற்று கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | சொத்துக்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் கமநல வங்கி கணக்கீட்டு மென்பொருட்களை கொள்வனவு செய்ய ஒன்று ரூபா 17,131 வீதம் 14 கமநல சேவை செயற்குழுக்கள் கமநல அபிவிருத்தி மாவட்ட பிரதி ஆணையாளரிற்கு செலுத்தியிருந்த போதும் மீளாய்வாண்டு | ஏதிர்வரும் ஆண்டில் சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதெ. | உரியவாறு செம்மையாக்கல் செய்து கணக்குகளை சரிசெய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதி வரை அந்த உபகரணங்கள் செயற்குழுக்களிற்கு கிடைத்திருக்காத போதும் அக் கொடுப்பனவை முற்பணமாக கணக்கீடு செய்யாது ரூபா 119,917 தொகை செலவாக மற்றும் ரூபா 119,917 தொகை நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் 16 கமநல சேவை செயற்குழுக்களில் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் ரூபா 998,428 ஆன போதும் நிதி நிலைமை கூற்றில் நடைமுறை பொறுப்பு அந்த அளவால் குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கமநல சேவை செயற்குழு கணக்காய்வு கட்டணம் ரூபா 3,680 தொகையை கூடுதலாக காண்பித்திருந்தது. | விடயங்களை கண்டறிந்து சீராக்க மற்றும் செலுத்த நடவடிக்கை எடுப்பதென. | கணக்குகளை சீராக்க மற்றும் நிலுவை கணக்காய்வு கட்டணத்தை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | வெலிவிட கமநல சேவை செயற்குழுவில் ரூபா 390,000 பெறுமதியான 2500 கிலோ கிராம் யூரியா பசளை தொடர்பான இருப்பு முழுமையாக கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | இலாபத்திற்கு ஏற்பட்டிருந்த தாக்கத்தை எதிர்வரும் ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுப்பதென. | இருப்பு பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன், நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க வேண்டும். |
| (ஏ) | அலவத்துகொட கமநல சேவை செயற்குழுவினால் நிதி நிலைமை கூற்றில் மொத்த சொத்துக்களின் பெறுமதியை ரூபா 57,454,408 ஆக மற்றும் உரிமைகளின் பெறுமதியை ரூபா 57,508,208 ஆக காண்பித்ததில் ரூபா 53,800 இனால் நிதி நிலைமை கூற்றில் சமப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதென. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியதுடன், தொங்கல் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | மாரஸ்ஸன கமநல சேவை செயற்குழுவினால் நிதி செயலாற்றுகை கூற்றினுள் காண்பித்துள்ள மொத்த செலவுகளின் கூட்டுத் தொகை ரூபா 124,613 குறைத்து காண்பித்துள்ளதால் மீளாய்வாண்டில் மிகை அப் பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியதுடன், குறித்த செம்மையாக்கலை மேற்கொள்ள வேண்டும். |
| (ஒ) | கலகெதர கமநல சேவை செயற்குழுவினால் காசு பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் செயற்பாட்டு, முதலீட்டு மற்றும் நிதி நடவடிக்கைகளின் தேறிய காசு பாய்ச்சல் ரூபா 315,577 ஆன போதும் அதனை ரூபா 2,116,720 | எதிர்காலத்தில் இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதென. | குறித்த சரியான காசு பாய்ச்சல்கள் காசு பாய்ச்சல் கூற்றிற்கு இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,801,143 கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | | |
| (ஓ) | மெனிக்திவெல கமநல சேவை செயற்குழுவினால் மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவுகள் மீண்டெழும் செலவாக இணங்காட்டப்பட்டுள்ளமையாலும் மற்றும் போவல கமநல சேவை செயற்குழுவினால் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய செலவினங்கள் பதிவிடப்பட்டுள்ளதன் காரணமாகவும் மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட இலாபமானது முறையே ரூபா 123,100 மற்றும் ரூபா 102,174 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதெனை. | மூலதன செலவினத்தை உரியவாறு இனங்கண்டு மூலதனமாக்க வேண்டும். |

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாரஸ்ஸன கமநல சேவை செயற்குழுவில் விதை மற்றும் ஏனைய பசளை வியாபார கணக்கு மீதிகள் குறித்த பொருண்மையான இருப்புக் கணக்கு மீதிகளிற்கு இடையே ரூபா 522,927 ஆன இணங்காமை காணப்பட்டது. | 2025 ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்வதெனை. | கணக்கு மீதிகளை இணக்கம் செய்து நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டியதுடன், குறித்த சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 10 கமநல சேவை செயற்குழுக்களில் வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் விடயங்கள் உள்ளடங்களாக 43 பேரேட்டு கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 18,011,339 ஆன மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ள மீதிகளுடன் இணக்கம் செய்யம் போதும் வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் நிதிக்கூற்று மீதிகளுடன் இணங்கும் வகையில் கணக்கு மீதிகளை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதெனை. | இணக்கம் செய்து கணக்கு மீதிகளின் சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும். |
| (இ) | 04 கமநல சேவை செயற்குழுக்களில் பரீட்சை மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ள மீதிகளில் பெறுமதி ரூபா 3,603,943 ஆன வித்தியாசமும் 04 செயற்குழுக்களில் நிலையான சொத்து பெறுமதி ரூபா 823,094 ஆன விதிதியாசமும் காணப்பட்டது. | எதிர்காலத்தில் நிதிக்கூற்று மீதிகளுடன் இணங்கும் வகையில் கணக்கு மீதிகளை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதெனை. | -மேற்படி- |
| (ஈ) | ஏதன்டுவாவ கமநல சேவை செயற்குழுவில் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் கடன்படுனராக காண்பித்துள்ள ரூபா 3,736,021 ஆன மீதியினுள் உள்ளடங்கும் 2017 இலிருந்து நிலவிவரும் மீதியான ரூபா 2,175,433 கிடைக்க வேண்டிய பசளை நிவாரண | எதிர்காலத்தில் நிதிக்கூற்று மீதிகளுடன் இணங்கும் வகையில் கணக்கு மீதிகளை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதெனை. | -மேற்படி- |

முற்பண மீதி கடன்படுனர் பேரேட்டின் பிரகாரம் ரூபா 4,718,752 ஆனது. அதன் பிரகாரம் ரூபா 2,543,319 ஆன வித்தியாசம் காணப்பட்டது.

**1.3.4 தொங்கல் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் 8 கமநல சேவை செயற்குழுக்களில் நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருந்த நீண்ட காலமாக நிலவிவரும் ரூபா 219,193 ஆன வரவு மற்றும் ரூபா 758,115 ஆன செலவு தொங்கல் மீதிகளை தீரத்திருக்கவில்லை. | குறித்த மீதி எண்ணிக்கைகளை கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகள் தொடர்பாக கண்டறிந்து தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.3.5 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் 30 கமநல சேவை செயற்குழுக்களில் நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ள கூட்டுத் தொகை ரூபா 26,821,696 ஆன 176 சொத்து மீதிகள் மற்றும் ரூபா 9,847,014 ஆன 158 பொறுப்பு மீதிகளிற்கு உரிய நிலையான சொத்து பதிவேடு, அட்டவணை, மீதி உறுதிப்பாடு, பதிவேடுகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | கணக்கு அறிக்கைகளில் காணப்படும் நீண்ட காலமாக நிலவிவரும் மீதிகள் தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதுடன் மீதிகள் காணப்படும் நிலையான சொத்து பதிவேட்டை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதுடன் ஏனைய மீதி உறுதிப்பாடுகளை எதிர்காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

**1.4 சட்டம் விதி, பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

| | சட்டம், விதி, பிரமாணங்கள் என்பவற்றடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| i. | நிதிப் பிரமாணம் 110 | 26 கமநல சேவை செயற்குழுவினால் சேத நட்ட பதிவேடுகளை பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சேத நட்ட பதிவேட்டை பேணிச் செல்ல நடவடிக்கை எடுப்பதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், இணங்காத தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | நிதிப் பிரமாணம் 396 | 08 கமநல சேவை செயற்குழுக்களில் காலாவதியான ரூபா 92,064 தொகை பெறுதியான 19 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| iii. | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 1981 ஒக்டோபர் 16 திகதிய இலக்கம் 107 கொண்ட கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கையின் 06 பந்தி | 40 கமநல சேவை செயற்குழுக்களில் நிறைவேற்று செயலாளர், கமநல வங்கி எழுதுனர் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைப்பு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களினால் பிணை வைக்க நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 திகதிய இலக்கம் 08/2009 மற்றும் 2009 ஜுன் 17 திகதிய இலக்கம் 09/2009(1) கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | 36 கமநல சேவை செயற்குழுக்களில் உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை மற்றும் வெளிச் செல்லலை பதிவிட விரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்தி இருக்கவில்லை. | காணப்படும் விரல் அடையாள இயந்திரம் மூலம் வருகை மற்றும் வெளிச் செல்லலை பதிவிட விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாக மற்றும் குறித்த பராமரிப்பு நிறுவனங்களின் அறிவுரை பிரகாரம் வருகை மற்றும் வெளி செல்லல் அறிக்கையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்ப வேண்டியதுடன், இணங்காத தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| i | 1986 ஒக்டோபர் 21 திகதிய இலக்கம் 264 கொண்ட சுற்றறிக்கையின் 01 பந்தி | குறித்த ஆண்டினுள் அறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், 17 கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,108,586 ஆன அறை வாடகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்கு உரிய அறை வாடகை 2024 ஆண்டில் அறவிடப்பட்டுள்ள தாகவும் பழைய மீதிகளை பதிவழிக்க பிரதி ஆணையாளர் அவர்களின் அறிவுரையை கோரியுள்ளதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறை வாடகையை அறவிட வேண்டியதுடன், அதன் பிரகாரம் செயற்படாத தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | 2016 பெப்ரவரி 09 திகதிய இலக்கம் 03/2016 கொண்ட சுற்றறிக்கை | 06 கமநல சேவை செயற்குழுக்களில் குறித்த அதிகார பிரதேசத்தினுள் பதிவு செய்துள்ள 119 கமநல அமைப்புக்களில் 297 கமநல அமைப்புக்களை விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதிவியாளரினால் மற்றும் 53 கமநல அமைப்புக்களை நிறைவெற்று உத்தியோகத்தரினால் பரீட்சித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பரீட்சிப்பு படிவத்தின் பிரகாரம் கமநல அமைப்புக்களை பரீட்சிப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், இணங்காத தரப்பினரிற்கு எதிராக செயற்பட வேண்டும். |
| (ஈ) | திறைசேரி சுற்றறிக்கை<br><br>1978 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 842 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் 31 கமநல சேவை செயற்குழுக்களினால் நாளாதுவரையாக்கிய நிலையான சொத்து பதிவேட்டை பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலையான சொத்து பதிவேட்டை நாளாதுவரையாக் க நடவடிக்கை எடுப்பதென. | நிலையான சொத்திற்காக சுற்றறிக்கை பிரகாரம் நிலையான சொத்து பதிவேடொன்றை பேணிக் கொள்ள வேண்டும். இணங்காத |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 பந்தி | 23 கமநல சேவை செயற்குழுக்கள் விலைமனு கோராது ரூபா 50,659,579 பெறுமதியான பண்டங்களை கொள்வனவு செய்திருந்தன. | அவசர கொள்வனவிற்காக செயற்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுள்ளதாகவும் உறிவுரை வழங்கியுள்ளவாறு எதிர்காலத்தில் விலைமனு கோர நடவடிக்கை எடுப்பதென. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், இணங்காத தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கண்டி மாவட்டத்தின் 45 கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கூட்டுத் தொகை ரூபா 27,299,236 ஆன தேறிய மிகையானதுடன், அதற்கு நேரொத்ததாக 37 செயற்குழுக்களில் கடந்த ஆண்டில் ரூபா 11,212,683 ஆன மிகையும் ஆனது. மீளாய்வாண்டில் 45 கமநல வங்கிகளிற்கு உரியதாக கூட்டுத் தொகை ரூபா 38,680,955 ஆன மீகையானதுடன் அதற்கு நேரொத்தாக கடந்த ஆண்டின் மிகை ரூபா 32,522,278 ஆனது.

**2.2 நிதி விளைவுப் பகுப்பாய்வு**

40 செயற்குழுக்களிற்கு உரியதாக நிதி விளைவுகளில் ரூபா 18,843,625 ஆன வளர்ச்சியும் 5 செயற்குழுக்களிற்கு உரியதாக நிதி விளைவுகளில் ரூபா 1,044,594 ஆன வீழ்ச்சியும் அவதானிக்கப்பட்டன. இந்த வளர்ச்சிக்கு நிதி மற்றும் ஏனைய செலவுகள் குறைந்தமை, ஏக்கர் வரி வருமானம், ஏனைய வருமானம் மற்றும் கட்டண பெறுவனவு அதிகரித்தமை, முக்கிய காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 21 கமநல சேவை செயற்குழுக்கள் அவை அமைந்துள்ள காணிகளின் உரிமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக மற்றும் எதிர்காலத்தில் சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதென. | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அறிவுரை பிரகாரம் காணி சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 05 கமநல சேவை செயற்குழுக்களில் மீளாய்வாண்டு இறுதி இருப்பில் காணப்பட்ட | இருப்பை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்காக செயற்குழு அங்கீகாரத்தின் பின்னர் கமநல அபிவிருத்தி | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுப் பெறுமதி ரூபா 116,824 ஆன விதை இருப்பும், ரூபா 301,220 ஆன சேதனப் பசளை இருப்பும் காலாவதியாகி காணப்பட்ட போதும் இந்த இருப்பு தொடர்பாக 2006 திசெம்பர் 08 திகதிய இலக்கம் 2006/08 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் முறையான வாறு பொருண்மையான இருப்புக் கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதென. | |
| (இ) | தலாதுஓய கமநல சேவை செயற்குழுவினால் 2023 ஆண்டில் சுஹுரு கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டு நலன்பெறுனர்களிற்கு பசுமை கூடங்களை நிர்மாணிக்க கமநல சேவை அதிகார பிரதேசத்தின் விவசாயிகளை தெரிவு செய்யமாறு அறிவித்திருக்கையில் வேறு அதிகார பிரதேச விவசாயி ஒருவரை நலன்பெறுனராக தெரிவு செய்த காரணத்தால் பசுமை கூடங்களை நிர்மாணிக்கும் கம்பனி வேறு அதிகார பிரதேசத்தில் நிர்மாணிப்பதை நிராகரித்த காரணத்தால் இரண்டு நலன்பெறுனர்களிற்காக பங்களிப்பாக கிடைந்த ரூபா 1,000,000 ஆன தொகை 2023 திசெம்பர் மாதம் முதல் கணக்காய்வு திகதி வரை செயற்குழுக் கணக்கில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கமநல அபிவிருத்தி திணைக்களம் வழங்கும் அறிவுரையின் மீது நிதியை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதென. | முறையாக செயற்படாத தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும், மேற்கொள்ளப்படாத செயற்திட்டத்தின் மீது நிறுத்தி வைத்த தொகையை விடுக்க வேண்டும். |
| (ஈ) | கிராகம கமநல சேவை செயற்குழுவில் களஞ்சியத்திற்கு வலது பக்கத்தில் நிலையத்தின் சுமார் 40 சதுர படி அளவு நிலத்தில் தனியார் தரப்பினரால் அனுமதியின்றி நடாத்திச் செல்லும் சீமேந்துக் கல் வேலைத்தளம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தற்கான சான்றுகள் இருக்கவில்லை. | மாவட்ட அலுவலகத்திற்கு தற்போது அறிவித்துள்ளதென. | இது தொடர்பாக பரீட்சித்து சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | 14 கமநல சேவை நிலையங்களில் 266 கமநல சேவை அதிகார பிரதேச பிரிவுகளில் 2024 சிறு போகத்தின் போது பயிர் செய்த முடியமான வயல் காணிகளின் அளவு 6617 ஏக்கர்கள் ஆனதுடன் அவற்றில் பயிர் செய்துள்ள அளவு 2457 ஏக்கர்கள் ஆகும். அது பயிர் செய்ய முடியுமான வயல் காணிகளின் சதவீதமாக 37.12 ஆன கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | அனைத்து காணிகளிலும் நெல் பயிரிடப்படாத போதும் மரக்கறி, போக பயிர்கள் பயிர் செய்யப்பட்டுள்ளதென. | விவசாய காணிகளிலிருந்து சிறப்பான விளைவுகளை பெற்றுக் கொள்ள வேலைத் திட்டங்களை செயற்படுத்த வேண்டியதுடன், பொறுப்பான தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 14 கமநல சேவை நிலையங்களில் 266 கமநல சேவை அதிபார பிரதேச பிரிவுகள் 2024/2025 பெறும் போகத்தில் பயிர் செய்ய முடியுமான வயல் காணிகளின் அளவு 6722 ஏக்கர்களில் பயிர் செய்துள்ள அளவு 3005 ஏக்கர்கள் ஆகும். அது பயிர் செய்ய முடியுமான வயல் காணிகளின் சதவீதமாக 44.7 ஆன கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | ஒரு பிடியில் கமநிலத்திற்கு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிர் செய்ய முடியமான அனைத்து வயல்களிலும் பயிரிட்டுள்ளதென. | -மேற்படி- |
| (இ) | 30 கமநல சேவை நிலையங்களில் 2024 ஆண்டு இறுதியில் பழைய வயல்களின் அளவு 2415 ஏக்கர்கள் ஆகும். | பயிர் செய்யப்படாத விவசாய காணிகளில் பயிர் செய்ய நடவடிக்கை எடுப்பதென. | பயிர் செய்யப்படாத வயல் காணிகள் தொடர்பாக சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 41 கமநல சேவை செயற்குழுக்கள் 2018 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 07/05/12/க.அ/த.கோ கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின் அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்து நிலவிவரும் கூட்டுத் தொகை ரூபா 15,578,872 ஆன 110 சொத்து விடயங்களை மற்றும் கூட்டுத் தொகை ரூபா 13,028,535 ஆன 113 பொறுப்பு விடயங்களை தீர்த்திருக்கவில்லை. | மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான தகவல்கள் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதென. | முகாமைத்துவ அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 03 கமநல சேவை செயற்குழுக்களினால் கனணிகளை கொள்வனவு செய்வதற்காக கமநல அபிவிருத்தி பிரதி ஆனையாளரிற்கு ரூபா 1,234,065 தொகையை செலுத்தியிருந்த போதும் கணக்காய்வு திகதி வரை இந்த கனணி நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆனையாளரின் அறிவுரை பிரகாரம் அவற்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | அந்த உபகரணங்களை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது பழைய வயல்களை பயிர் செய்யும் கடன் பெற்றுக் கொண்டு 69 விவசாயிகளிடமிருந்து மேலும் ரூபா 1,555,664 ஆன கடன் தொகை குருந்துவத்த மற்றும் கிராகம 02 கமநல சேவை நிலையங்களிற்கு அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | நிலுவை கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவற்றை கால ரீதியாக அறவிடாத அலுவலர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கலகெதர கமநல சேவை செயற்குழுவினால் விற்பனை தேவைப்பாடு தொடர்பாக கவனத்திற் கொள்ளாது கொள்வனவு செய்திருந்தன் மீது 5 இருப்பு உருப்படிகளின் ரூபா 119,581 பெறுமதியான இருப்பு உருப்படிகள் 3 ஆண்டுகளிற்கு அதிக காலமாக விற்பனை செய்யப்படாது காணப்பட்டன. | எதிர்காலத்தில் காலாவதியான இருப்பை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதென. | விவசாயிகளின் தேவைப்பாட்டை இனங்கண்டு விற்பனை செய்வதற்காக பண்டங்களை கொள்வனவு செய்ய வேண்டியதுடன், இருப்பை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 கமநல சேவை செயற்குழுக்களில் கமநல சேவை திணைக்களத்திலிருந்து கிடைத்த 02 அறுவடை இயந்திரங்கள், டெக்டர் வண்டியொன்று, புல் வெட்டும் இயத்திரமொன்று மற்றும் ரூபா 1,000,080 பெறுமதியான 16 Dot Matrix Printer மற்றும் ரூபா 950,000 ஆன 05 சேதனப் பசளை துண்டாக்கும் இயந்திரங்கள் மற்றும் 10 செயற்குழுக்களில் 8 நாற்றுக் கூடங்கள், காளான் குகை மற்றும் ஹெல உணவகமொன்று குறை பயன்பாட்டுடன் நிலவின. | சொத்துக்களை எதிர்காலத்தில் ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்த செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கிராகம கமநல சேவை செயற்குழுவினால் பாடசாலை | எதிர்காலத்தில் சொத்துக்களை | விளைவற்ற சொத்துக்களை |

| | | | |
|---|---|---|---|
| | மணவர்களிற்கு விவசாய உபகரணங்கள் மற்றும் பாரம்பரிய உள்ளீடுகளை காட்சிப்படுத்தும் அருங்காட்சியகமாக பயன்படுத்தும் நோக்கில் 2021 ஆண்டில் ரூபா 208,630 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ''விவசாய இல்லம்'' கூடத்தை கணக்காய்வு திகதி வரை நோக்கத்திலான பணிக்காக பயன்படுத்தாது 03 ஆண்டுகளிற்கு அதிக காலமாக விளைவற்று காணப்பட்டது. | ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | பயன்படுத்த செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

**3.4 நட்டம் மற்றும் முறைகேடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 கமநல சேவை செயற்குழுக்களில் நிதி மோசடி தொடர்பாக செயற்குழுக்களிற்கு அறவிட வேண்டியதாக இருந்த ரூபா 2,487,716 ஆன தொகையை பொறுப்பாளர்களை நிச்சயித்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிட்டிருக்கவில்லை. | மீதிகளை அறவிடுவதற்கான தகவல்களை மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளதென. | முறையானவாறு விசாரணை நடாத்தி விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கமநல வங்கி**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கியினால் மென்பொருள் ஒன்றை இஸ்தாபிப்பதற்காக Scanner இயந்திரமொன்று மற்றும் 02 Dot Matrix Printer களை கொள்வனவு செய்வதற்காக 30 கமநல சேவை செயற்குழுக்களில் இருந்து ரூபா 7,314,726 தொகையை செலுத்தியிருந்த போதும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை குறித்த மென்பொருளை இஸ்தாபிக்காததன் மீது அந்த உதிரிப்பாகங்கள் விளைவற்று காணப்பட்டன. | ஒரு உபகரணம் ஏற்கனவே கிடைத்துள்ளதுடன் மற்றைய இரண்டு உபகரணங்களை கணக்கீடு செய்ய வேண்டிய முறை தொடர்பாக மாவட்ட அலுவலகத்திடமிருந்து அறிவுரை கோரியுள்ளதென. | மென்பொருளை விரைவில் சரியாக இஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 ஏப்ரல் 24 திகதிய இலக்கம் 01/2023 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 2.1.1 பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கமநல வங்கி (முன்னோடி) செயற்திட்டத்தினலும் வருடாந்த இறுதிக் கணக்கறிக்கை பிரகாரம் | 2025 முதல் தேறிய மாற்றப்பட்ட இலாபத்தில் இருந்து 10 சதவீதத்தை ஒதுக்க நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினரிற்கு எதிராக |

| | | | |
|---|---|---|---|
| | தேறிய மாற்றப்பட்ட இலாபத்திலிருந்து 10 சதவீதத்தை கடன் அபாயத்திற்காக விவசாய இடர் கடன் காப்புக் கணக்கிற்கு ஒதுக்குவதனை வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய போதும் மீளாய்வாண்டில் 21 கமநல சேவை செயற்குழுக்களில் அவ்வாறு ஒதுக்கீட்டை மேற்கொண்டு இருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 ஜுன் 11 திகதிய இலக்கம் 7/12/8/01 கொண்ட கடிதம் பிரகாரம் விவசாய இடர் கடன் காப்புக் கணக்கில் காணப்படும் தொகையை சேமிப்பு கணக்கில் உச்ச அளவான ரூபா 25,000 மீதியை நிறுத்தி வைத்துக் கொண்டு எஞ்சிய தொகையை அதிக வட்டி கிடைக்கும் நிலையான வைப்புச் செய்ய வேண்டிய போதும் மீளாய்வாண்டில் இறுதி வரை 19 கமநல வங்கிகளில் விவசாய இடர் கடன் நிதிய கணக்கின் மீதி தொடர்பாக மேற்குறித்த ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலையான வைப்பு கணக்கொண்றில் வைப்புச் செய்ய நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஈ) | 42 கமநல வங்கிகளில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை 4,132 விவசாயிகளிற்கு வழங்கியிருந்த கடன் தொகையில் இலிருந்து கூட்டுத் தொகை ரூபா 119,275,303 ஆன நிலுவை கடன் மீதியும் ரூபா 13,355,932 ஆன நிலுவை கடன் வட்டியும் 6 மாதங்களிற்கும் 27 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலமாக காலம் கடந்துள்ள போதும் அறவிட்டிருக்கவில்லை. | தற்போது அந்த கடன் மற்றும் வட்டியை அறவிடுவதற்காக தீர்ப்புச் சபைக்கு மற்றும் நீதிமன்றத்திற்கு குறித்த கோவைகள் அனுப்பப்பட்டு வருவதென. | கடன் வழங்குதல் மற்றும் நிலுவை கடனை கால ரீதியாக அறவிடாதது தொடர்பாக முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு குறித்த தரப்பினரிற்கு எதிராக செயற்படவும், நிலுவை கடன் மீதியை அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 28 கமநல வங்கிகளில் 151 வைப்பு மீதிகளின் பேரேட்டு மீதி பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாததால் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட சில மீதிப் பட்டியல்கள் சமப்படாததால் கூட்டுத் தொகை ரூபா 282,084,493 ஆன பேரேட்டு மீதிகளின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | ஏதிர்காலத்தில் பேரேட்டு மீதி பட்டியல்களை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதென. | வவப்புக்களிற்குரிய அட்டவணைகளை சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டிற்கு உரியதாக 13 கமநல வங்கிகள் நிலையான வைப்பு வட்டி ரூபா 1,566,807 தொகையை கூடுதலாகவும் 11 கமநல வங்கிகள் நிலையான வைப்பு வட்டி ரூபா 690,647 தொகையை குறைத்தும் கணக்கீடு செய்திருந்தன. | எதிர்காலத்தில் கணக்குகளை சரியாக தயாரிப்பதென. | காலப் பகுதிக்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன், குறித்த சீராக்கத்தை மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | 2012 பெப்ரவரி 29 திகதிய இலக்கம் 4/2012 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவு மற்றும் 2021 ஜுலை 15 திகதிய இலக்கம் 7/12/4/5 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் திருத்திய கடிதத்தின் பிரகாரம் கமநல வங்கியினால் ஆண்டு இலாபத்திலிருந்து பங்கிலாகம் ஒதுக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் மீளாய்வாண்டில் 20 கமநல வங்கிகளில் அவ்வாறு ஒதுக்கீடு மேற்கொள்ளவில்லை என அவதானிக்கப்பட்டன. | 2025 ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது பங்கிலாபம் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2020 ஜுன் 24 திகதிய இலக்கம் 09/2020 – 04/2012 (திருத்திய I) கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 3.8.6 பந்தி பிரகாரம் செயற்திட்ட கடனிற்காக தனயோஜனா கணக்குகளை திறக்க வேண்டிய போதும் 19 கமநல வங்கிகளில் தனயோஜனா கணக்குகளை திறக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஒவ்வொரு செயற்திட்ட கடன்தாரர்களிற்கும் தனயோஜனா கணக்கொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு மேற்கொள்ளாத தரப்பினரிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 2014 ஜுலை 09 திகதிய இலக்கம் 05/2014 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை பிரகாரம் பெறமக சிறுவர் சேமிப்பு கணக்குகளின் சேமிப்பு மீதிகளை 18 வயது பூர்த்தியான கணக்கு உரிமையாளர்களிற்கு சாதாரண சேமிப்பு கணக்குகளிற்கு மாற்றப்பட வேண்டிய போதும் 14 கமநல சேவை செயற்குழுக்களில் அவ்வாறு மேற்கொண்டு இருக்கவில்லை. | சாதாரண சேமிப்பு கணக்குகளிற்கு மாற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | 2012 பெப்ரவரி 29 திகதிய இலக்கம் 04/2012 கொண்ட கமநல | சேமிப்பு கணக்கொன்றை திறக்க நடவடிக்கை | சுற்றறிக்கை அறிவுரை பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 3.4.11 (i) பந்தி பிரகாரம் இடர் கடன் காப்பு கணக்கிற்கு ஒன்றுதிரலும் தொகையை அரச வங்கி ஒன்றில் அதிக வட்டி கிடைக்கும் சேமிப்பு கணக்கொன்றில் நிறுத்தி வைக்க வேண்டிய போதும், அவ்வாறு தனியாக சேமிப்பு கணக்கொன்றை திறந்து இருக்காத கமநல சேவை செயற்குழுக்கள் 4 காணப்பட்டன. | எடுப்பதென. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | யடியாவல, வாவின்ன மற்றும் மெதவல கமநல வங்கிகளில் கூட்டுத் தொகை ரூபா 365,062 ஆன தொங்கல் கணக்கு மீதிகள் கணப்பட்டன. | கருத்து தெரிதவிக்கவில்லை. | வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு கணக்கு மீதிகளை சரிசெய்ய வேண்டும். |
| (ஔ) | 16 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரிய 48 மீதிகளின் நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ள மீதிகளை பயன்பாட்டு அறிக்கைகளுடன் இணக்கம் செய்யும் போது கூட்டுத் தொகை ரூபா 29,039,958 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | ஒழுங்கான முறையில் இணக்கம் செய்து கணக்கு மீதிகளை சீராக்க வேண்டும். |